**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**OS. NO: 5329/2023**

**Deposition of: PW1** **DATE: 14.08.2025**

**NAME: M.Rajkumar**

**AGE: 56 Years**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்:**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் வாதி நிறுவனத்திற்கு நான் முன்னிலையாக அதிகாரம் அளித்துள்ளார்கள், அந்த ஆவணம் வா.சா.ஆ.11 தாக்கல் செய்துள்ளேன். அதில் எனது கையெழுத்து இல்லை. வாதி நிறுவனம் கம்பெனி சட்டத்தின்படி எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் 2021 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. 2021ம் ஆண்டு வாதி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது சென்னை project ல் யார் Director ஆக இருந்தார் என்றால் சி.பி.செந்தில் குமார் என்பவர் Director ஆக இருந்தார். வாதி நிறுவனத்தில் அந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எவ்வளவு பணியாளர்கள் பணிபுரிந்தார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு exact ஆக தெரியாது. நான் வாதி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே அந்த நிறுவனத்தின் பணியில் சேர்ந்துவிட்டேன். நான் வாதி நிறுவனத்தில் General Manager ஆக பணியில் சேர்ந்தேன். 2ம் பிரதிவாதி வாதி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே வாதி நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார் என்றால் சரி தான். வாதி நிறுவனத்தில் 2ம் பிரதிவாதி Branch Manager ஆக பணியில் சேர்ந்தார். வாதி நிறுவனத்தில் Director ஆக இருந்த செந்தில் குமார் எப்பொழுது ராஜினாமா செய்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. செந்தில் குமார் வேலையை ராஜினாமா செய்தபோது

அவருடன் சேர்ந்து எத்தனை பேர் ராஜினாமா செய்தார்கள் என்றால் அவர் ராஜினாமா செய்த தேதியில் செந்தில் குமார் மட்டும் ராஜினாமா செய்தார். செந்தில் குமார் ராஜினாமா செய்தவுடன் வாதி நிறுவனத்தில் வேலையில் இருந்த நான்கு நபர்கள் அதே காலகட்டத்தில் ராஜினாமா செய்தார்கள் என்றால் சரி தான். செந்தில் குமார் ராஜினாமாவையும் அதே காலகட்டத்தில் ராஜினாமா செய்த மற்ற நான்கு நபர்களின் ராஜினாமாவையும் ஒரு மாத அறிவிப்பு இல்லாமலேயே அவர்களது ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த ராஜினாமாக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு எத்தனை நபர்களை புதிதாக வேலைக்கு அமர்த்தினோம் என்றால் எத்தனை நபர் என்று எனக்கு ஞாபகமில்லை. புதிதாக வேலைக்கு எடுத்த பிறகு எத்தனை ஊழியர்கள் வாதி நிறுவனத்தில் பணியில் இருந்தார்கள் என்றால் எத்தனை நபர்கள் என்ற விவரம் எனக்கு ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தில் எந்த தேதியில் ராஜினாமா செய்தார் என்றால் தேதி ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதியின் ராஜினாமா வாதி நிறுவனத்தால் எந்த தேதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை. 2ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தில் பெற்ற பணிப்பலன்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2ம் பிரதிவாதி மாதம் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் சம்பளம் வாங்கினார். 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2ம் பிரதிவாதியின் activities சரியில்லை என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நிலையில் வாதி நிறுவனம் 23.01.2023 அன்று வாதி நிறுவனத்தின் Board of Directors Board Resolution ல் 2ம் பிரதிவாதியை சென்னை நிறுவனத்தின் Genearl Manager ஆக பொறுப்பு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. 2ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தின் மிக திறமையாகவும், கடினமாகவும்

உழைத்து வாதி நிறுவனத்தை மிகப்பெரிய நிலைக்கு உயர்த்தியதால் 2ம் பிரதிவாதி வேறு நிறுவனத்தில் பணியில் சேர எங்களுக்கு விருப்பம் இல்லாததால் 2ம் பிரதிவாதி கொடுத்த ராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொள்ளாமல் பொய்யான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தில் ராஜினாமா செய்த போது அவரது பொறுப்பில் இருந்த அனைத்து பொருட்களையும் வாதி நிறுவனத்தில் ஒப்படைத்துவிட்டார் என்றால் தெரியவில்லை. 2ம் பிரதிவாதி வாதி நிறுவனத்தின் பணியில் இருந்து விலகியபோது வாதி நிறுவனத்தில் 2ம் பிரதிவாதி விட்டு சென்ற 1.Business plan templated, 2.Personal diary Nos.2, 3.Personal Gift Articles, 4.Cheque book மற்றும் விலையுயர்ந்த பேனாக்கள் மூன்று எண்ணிக்கை ஆகியவற்றை வாதி நிறுவனம் 2ம் பிரதிவாதியிடம் இதுவரை திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, திரும்ப கொடுத்துவிட்டோம். 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் 2ம் பிரதிவாதி வேலைக்கு சேர்ந்த பிறகு 3ம் பிரதிவாதி நிறுவனத்திலிருந்து எத்தனை பேர் வாதி நிறுவனத்தில் வேலைக்கு சேர்த்தோம் என்றால் ஒரு நபரை தான் பணியில் சேர்த்தோம். அவர் இப்போது பணியில் இல்லை என்று சாட்சி கூறுகிறார். அந்த ஒரு நபர் எந்த தேதி, மாதம், வருடம் வாதி நிறுவனத்தில் பணியில் சேர்ந்தார் என்றால் தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. அந்த நபர் எங்கள் நிறுவனத்தில் வேலையில் இல்லை. அவர் எப்போது பணியில் இருந்து ராஜினாமா செய்தார் என்றால் தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. அந்த ஒரு நபர் மீண்டும் அவர் பணிபுரிந்த 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் சேர்ந்து பணியில் உள்ளார். இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இந்த வழக்கை நிரூபிப்பதற்காக 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோதே 3ம் பிரதிவாதி நிறுவனத்தில் பணியிலிருந்த

நபரை மிரட்டி வாதி நிறுவனத்தில் வேலைக்கு சேர்த்துள்ள விவரம் அந்த நபருக்கு தெரிந்ததால் அவர் வாதி நிறுவனத்தில் இருந்து ராஜினாமா செய்துவிட்டார் என்றால் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)